உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

[தொகுதி உ௪] அக்ஷய௵ ஐப்பசிமீ [பகுதி க௨.

Vol. XXIV. October-November-1926. No. 12.

காதல்.

[இதுவும் இதனையடுத்துள்ள அழகு என்பதும் ஆங்கில முதறிஞரான பேகன்கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு.]

கூத்தரங்கம் மனிதவாழ்க்கையினும் காதலுக்குக் கடப்பாடுடைத்து. ஏனெனில், கூத்தரங்கிற் பெருக இன்கூத்துக்களுக்கும் அருக வன்கூத்துக்களுக்கும் காதல் பொருளாகிறது: வாழ்க்கையிலோ சில்கால் மோகினிபோன்றும் சில்காற் கொடுங்காளிபோன்றும் அது மிகவும் குறும்புசெய்கிறது. பண்டும் இன்றும் நினைவெட்டுமட்டும் பெருந்தகையரனைவருள்ளும் வெறிமயக்களவு கழிகாமங் கைமிகந்தார் எவருமில்லையென நீவிர் காணலாகும்; இது பெருந்தணமும் பேராற்றலும் இச்சிற்றுணர்ச்சியை முற்றும் விலக்குவதைப் புலப்படுத்துகிறது. ஆயினும், உரோமப்பேரரசிற் சரியுரிமையுடைய மார்க்கஸ்அந்தோனியரையும், அந்நாட்டிற்கு நீதிமுறைவகுத்தபதின்மருள் ஒருவரான ஆப்பியஸ்க்ளாடியஸரையும் இதற்கு விலக்காகக் கொள்ளவேண்டும்: இவருள் முன்னவர் களைகடந்த காமுகர்; மற்றவர் விரதஞானி: ஆகவே பஞ்சையர்பசைந்தசிந்தையுண்மட்டுமன்றி உரவுநல்லாணுடையருள்ளத்துள்ளும், கருத்தொடுகாவாக்கால், காதல் புகவிடம்பெறுவது அபூர்வமேனும் அரிதன்றென்றறியலாகும்; "நாம் பரஸ்பரம் பரமதிருப்தி விளைக்கும் நாடகசாலையாயிருக்கிறோம்" என்பது *எபிகூரன் சிறுமாற்றம். †வீட்டையும் ‡பீட்டையும் 'உயர்வுள்ள'ப் படைத்த மக்கள்

* இவர் கிரேக்கதேசத்துத் தத்துவஞானிகளில் ஒருவர். † வீடு-மோக்ஷம். ‡ பீடு-பெருமை.

மாக்களொப்ப வாய்ப்பொறிக்கிடையாவிடினும் பெரும்பயன் நுகர்தற்கான கட்புலனுக்கடிமையாகிப் பஞ்சைப்பதுமையைப் பணிதலன்றிப் பிறிதொருவினையையும் பேணார்போலும். பொருள்களின் இயல்பையும் மதிப்பையும் புறக்கணித்துமிகும் இக் காமக்கடுமை, காதலன்றிப் பிறிதொன்றும் ஓவா உயர்வுநவிற்சிக்கு ஒல்லாமைகொண்டு குறிக்கலாகும் ஒரு புதுமையாம். இன்னும் அது சொல்லளவில் நில்லாது; ‘இச்சகம் பேசுவோர் மெச்சுமோரச்சாணி அதனை விரும்புபவன் அந்தராத்மா’ என்று நன்றுகூறப்பட்டிருப்பினும், காதலரே நெடுமொழி கழிநனியுகப்பர். ஏனெனில், காதலர் தாம்வீழ்வார்தகவுகருதுமளவு தமை மதிக்குஞ் செருக்குடைய சழக்கர் எஞ்ஞான்றும் இருந்ததில்லை; அதனால் உரமும் காமமும் ஒருதுறைமருவுதல் அரிதினுமரியதென்றுன்றோர்கூறுப. நிறையற்ற சுடுகாமச்சிறுமை வீழப்படுபவரன்றிப் பிறர்மட்டும் அறிவதொன்றன்று; ‘காதலி நுவர் கருத்தொருமித் தாதரவுபட்ட’விடத் தன்றித் தாம்வீழாது வீழப்படுவார் ஏதிலரெவரினும் இதனை நன்குணர்வர். ஏனெனில், காதல் எஞ்ஞான்றும் ஒத்த காதலையேனும் புறம்பொதிந்து அகத்தலரு மிகழ்ச்சியையேனும் கைம்மாறு கொள்ளுமென்பது இயற்கையறமாகும். பிறவற்றையன்றித் தன்னையுமே கெடுக்கவல்ல இக்காமத்தைக் கடக்க மாந்தர் நனிமிக்க கருத்துடையராகவேண்டும். காமம் தரும் பிறகேடுகளைக் காவியவரலாற்றால் நன்கறியலாம்: ஹெலனைவை மிகவிரும்பியவன் ஜூனோ (நிதிக்கடவுள்), பாலாஸ் (கலைக்கடவுள்) ஆகிய இருவர்தரும் பரிசையும் இழந்தான்*.

---

* ஒருகால், பாலாஸ், (கலைக்கடவுள்), ஜூனோ (நிதிக்கடவுள்), வீனஸ் (எழிலின்பக்கடவுள்) எனும் தெய்வமகளிருள் வாதமேற்பட்டுத் . தம்வழக்கைத் தீர்ப்பதற்கு இலீயநாட்டரசன் இளையமகனும் அழகனுமான பாரிஸ் என்பானிடம் போந்தனர். பாலாஸூம் ஜூனோவும் தத்தஞ்சார்பில் முடிவுசொல்லின் முறையே அறிவையும் திருவையும் பாரிசுக்குப் பரிசாகத்தருவதாகப்பகர, வீனஸ் தனக்கனுகூலமானமுடிவுசொல்லில் உலகில் அழகியருட் பேரழகியின் காதலின்பத்தைக் கையுறையாக்குவதாகக் கூறினள். பாரிஸ் வீனஸ் விரும்பியபடி அவள்சார்பாக முடிவுசொன்னான். அதற்காகக் கிரேக்கநாட்டிளவரசியும் தன்னிகரற்ற எழில்வளம்படைத்த நங்கையுமான ஹெலனுளிடம் பாரிஸை வீனஸ் அழைத்துச்சென்று அவனை யவள் காதலிக்குமாறுசெய்ய, கணவனை வஞ்சித்துத் தன்வயமான காதலியை யழைத்துக்கொண்டு மோகத்திலமிழ்ந்திய இருவரும் இலீயநாட்டிற்கேகினர் என்ற கதை மேலே குறிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், காமவின்பத்தைப் பெரிதும்விரும்புகின்றவன் திருவையும் அறிவையும் மருவுகின்றிலன். இக்காமம் ஒருவன் வலிதளர்தருணங்களில் வெள்ளமாய் வளருகின்றது. போக்கம்போல அத்துணை நன்கு தெளியப்படாவிடினும், பெருநிரப்பும் காமவளர்ச்சிக்குக் காரணமாகின்றது: இவ்விருநிலையும் காதலை மூட்டிக் கனிவிப்பதனால், மடமைக்குக் காதல் மகவெனத் தெளிவிக்கின்றன. காதலைக் கடக்கமுடியாதார் வரம்பிட்டடக்கிச் சிந்தனைக்குரிய செய்திகளினின்றும் வாழ்க்கைவினைகளினின்றும் அறவே யதனைவிலக்கின் நன்குறற்றுவாராவர். ஏனெனில், காரியவிருத்தியில் அஃதொருமுறை குறுக்கிடின மக்களின் ஆக்கம் அலைத்து அவரைத் தம்நோக்கங்களுக்குரிய மெய்ந்நெறியிற் செல்லொணுதாராக்குகின்றது. எப்படியோ வீரர் காதலுக்கு ஈடுபடுகின்றனர்; அன்னார் கள்ளினைப்போலவே இதனையும் காமுறுகின்றனரென்று எண்ணுகின்றேன்; ஏனெனில் வழக்கமாக விபத்துக்கள் இன்பங்களை வேதனமாக விரும்புகின்றன. மனிதன் இயல்பாகவே பிறர்பாற் பற்றுதலுற்றுநிற்குஞ்சார்புடையனுயிருக்கிறுன். அப்பற்று ஒருவர் அல்லது ஒருசிலர்மேற் செல்லாவழிப் பலரிடத்தும் பரந்தமைந்து, துறவிகளிடைச் சிலசமயங்களில் நாம் காணுமாறு, மக்களை ஈரமும் ஈகையும் உடையாராக்குகின்றது. மணக்காதல் மக்கட்சமுதாயத்தை ஆக்குகின்றது; நட்புக்காதல் அதனை நனிதிருத்துகின்றது; காமக்காதலோ அதனை அழித் திழிக்கின்றது.

ச. சோ. பாரதி.

அழகு.

மட்டவேலையமைந்த மதிப்புள்ள மாணிக்கம்போன்றது சால்பு: மெல்லியமுகச்சாயல்களைப் பெருவிடினும் நல்லுருவுடையானிடமமைந்த ஒழுக்கம் இனிதாகும்; அது காட்சிவனப்புடையதன்றெனினும் கம்பீரத்தோற்றமுடையதாகும். மற்று நல்லெழிலுடையரெல்லாம் சால்புடையராகக் காணப்படவுமில்லை; இழுக்காதிருத்தற்கன்றி நிறைமாண்பியற்ற இயற்கை பெருமுயற்சி யேற்கொள்வதில்லைப்போலும். ஆதலால்

அழகுடையோர் கற்றோராதலன்றிப் பெருந்திறலோராதல் இல்லை ; சான்றாண்மையினும் ஒப்புரவையே பயில்கின்றனர். எனில் இதுவும் என்ஞான்றும் நியதியில்லை ; ஏனென்றால் அகஸ்டஸ் ஸீஸர், டைடஸ் வேஸ்பாஸியானஸ், பிரான்ஸ் தேசத்துப் பிலிப்லேபேல், ஆங்கில் வரசர் நான்காம் எட்வர்டு, ஏதென்ஸ் நகரத்து ஆல்கீபியாடிஸ், பாரசீக நாட்டுச் சோபீ இஸ்மேல் இவர்களெல்லாம் உயர்பேராற்றலும் தங்காலத் தவருட் பேரழகும் உடையருமாவர். வனப்புக்கு வருணத்தினும் சாயலும், சாயலினும் உசிதகப்பீரநடையும் நல்லமைவுடையவாகும். தீட்டிய ஓவியம் காட்டவொண்ணாததே வனப்பின் வடித்தபாகமாகும் ; அதனை அளந்துரைப்பதற்கு உருவத்தின் முதற்காட்சியுமே போதியதன்று. குணவிகிதங்களில் ஒரு புதுமையற்ற மாட்சியுடைய வனப்பே கிடையாது. அபேல்லீஸோ அல்லது ஆல்பர்ட்டியூரரோ அதியற்பரென்று எவரும் சொல்ல இயலாது ; அவருள் ஒருவர் பெருக்கலளவையால் எழிலுருவமைக்க விரும்புகின்றார், மற்றவர் பலவேறுமுகங்களின் நற்சாயல்களைத்திரட்டி ஒருமுகமாட்சிநிறுவ விழைகின்றார். இனைய செய்முக விலாஸங்கள் செய்த சித்திரிகனையன்றி மற்றெவரையும் உவப்பியாவென்றெண்ணுகின்றேன். ஓவியன் முகங்களை உள்ளவற்றினும் நல்லனவாயெழுதவொல்லனெனக் கருதகில்லேன் ; ஏனெனில் பாணன் இசையினிற் பண்செய்யுமாறு அவன் அதனைச் சுவைப்புலனாலன்றிக் கேவலம் அளவைகளால் இயற்றாணாது. உற்றுநோக்கின் ஒன்றும் நன்றமையா உறுப்புக்கள் தம் ஒருப்பாட்டமைப்பா லழகுசெய்யும் முகங்களை யாரும் காணலாகும். வனப்பின் வடித்தபாகம் நனிபினிய சாயல்களின் செலவாமேல், ஆண்டில் முதியரும் அழகுடையராதல் அதிசயமன்றென்பது சாதமாகும்; இளமைதானே அழகியற்றுமெனு மெண்ணத்தானும் அதன்பாற் பொறுண்மையானுமன்றி இளைஞர் அழகுடையராவதில்லை. கெடுதற்கெளியவும் நீண்டிராதனவுமான வேனிற் கனிகளனையது அழகு: அது பெரும்பாலும் இளையரை விடரும் முதியரை முகவிலாசமற்றவருமாக்குகிறது: எனினும், அஃதினிதமையுமிடத்து ஒழுக்கம் ஒளிரவும் ஒழுக்கின்மை வெட்கித் தலைசாய்க்கவும் உதவுகிறது.

ச. சோ. பாரதி.

உ

இராஜாதித்தன் I.

கி. பி. 947—948.

தொன்றுதொட்டுவந்தபழங்குடியென்று போற்றப்பட்ட சோழர் குடியிலே கிறிஸ்தவாண்டு 948ல் (சகவாண்டு அஎயில்) சோழபெருமான் மகன் என்ற சிறப்புப்பெயர்பெற்ற முதற்பராந்தகன் இறந்தான். அவன் இறந்தசெய்தியைக்கேட்ட இரட்டவரசனான மூன்றாங்கிருஷ்ணன் இது சோழநாட்டிற் படையெடுத்தற் கேற்றசமயமென்றெண்ணித் தன் படைகளைத் திரட்டிக்கொண்டு தொண்டைமண்டலத்திற் பிரவேசித்தான்.

சோழசக்கரவர்த்தியான பராந்தகனது மூத்தபுதல்வனும், இளவரசனும், வடக்கிற் சயித்தநாட்டிற்கு அரசப்பிரதிநிதியாகவிருந்து கண்காணித்துவந்தவனுமான இராஜாதித்தன் தான் பாளயமிறங்கியிருந்த திருநாவலூரிலிருந்து புறப்பட்டு அவனை எதிர்க்கச் சென்றான். இருபெருஞ்சேனைகளும் அரக்கோணத்திற்கு அருகிலுள்ள தக்கோலத்தில் எதிர்ப்பட்டுச் சண்டையிட்டன. அப்போரில் இராஜாதித்தனே வெற்றியடைந்தனனாயினும், அவன், கன்னரதேவனது மைத்துனனும் மேலைக் கங்கவமிசத்தரசனுமான பூதுகனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டானென்று ஆதக்கூர்க் கல்வெட்டுக்கள்* கூறும். ஆனைமங்கலத்துச் செப்பேடுகளும் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இராஜாதித்தன் வஞ்சகமாகக் கொலையுண்டானென்று கூறாதபோதிலும், அவன் கன்னரதேவனை வென்ற செய்தியை அறிவிக்கின்றன. இவனே பராந்தகனுக்குப்பின் சோழசிங்காதனமேறினானென்றும் கூறுகின்றன. ஆகவே இராஜாதித்தன் தன் தகப்பனுக்குப் பிறகு சோழசிங்காதனமேறினனாகக்கொண்டாலும், அவன் பட்டாபிஷேகமின்றி யுத்தகளத்தி லிறந்தானென்று தெரிகிறது.

இக்கூற்றை யாதரிக்காத சிலர், இராஜாதித்தன் இளவரசனாகவே யிருந்து கன்னரதேவனைத் தக்கோலத்தில் எதிர்த்து இறந்தானென்றும்,

---

* Atakur Inscriptions, Epigraphist's report for 1910—11.

அக்காலத்திலாண்ட சோழமன்னன் பராந்தகதேவனென்றும், திரு வாலங்காட்டுப் பட்டயமும், ஆனைமங்கலத்துப் பட்டயமும் கூறுவன பொருந்தாக்கூற்றென்றும், கி. பி. 942 (சகம் அசுச) முதற் கொண்டே கன்னரதேவன் தொண்டைமண்டலத்தில் அரசுபுரிந்து வந்தானென்றும், இதற்குச்சான்று சித்தலிங்கமடம் கல்வெட்டென்றும், கன்னியாகுமரிக்கல்வெட்டு இன்ன இடத்தில் இவ்விதமாகக் கிருஷ்ணனை இராஜாதித்தன் வென்றானென்று கூறுமையான் அக்கூற்றுப் பொருந்தாதென்றும் வாதிப்பர்.

முன்னர்ப் பட்டயங்கள்கூறுவதைக் கவனிப்போம்.

பகைவரையழித்துப் பணியச்செய்யும் அவ்வரசன் (பராந்தகன்) இவ்வாழி சூழுலகம் போற்ற இறந்ததற்பின் வலிபொருந்தியவனும், மன்னர் மணி மகுடமுழுகழற்காலனுமான பராந்தகன்மகன் இராஜாதித்தன் அரசுரிமை பூண்டான். (திருவாலங்காட்டுப்பட்டயம்.)

சூரியவமிசத்துக்கோர் ஆபரணம்போல்பவனும் வீரனுமான இராஜாதித்தன் போர்க்களத்தில் வெல்லுதற்கரிய கிருஷ்ணராஜனை அவனது சேனையோடு கலங்கச்செய்து தன்யானையின்மேலிருந்தபடி விற்போரிட்டுக்கொண்டிருக்கையில் (கிருஷ்ணனுடைய) அம்பு மார்பிற்பட்டுருவி வீரசொர்க்கமடைந்தான். (ஆனைமங்கலத்துப்பட்டயம்.)

இவ்விரண்டும் இராஜாதித்தன் சோழசக்கரவர்த்தியானனென்பதை வற்புறுத்துகின்றனவாயினும், திருவாலங்காட்டுப்பட்டயத்தில் இராஜாதித்தன் இறந்தவிஷயம் கூறப்படவில்லையேயெனின் அச்செய்தியும் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது:—

அவனுடைய (பராந்தகனுடைய) மகன் போரில் கிருஷ்ணராஜனை வென்ற பிறகு வீரசொர்க்கமடைந்தான். அவனது இளவலான கண்டராதித்தர் பலமன்னருடையமுடிகளும் தனது திருவடிகளிற்படச் சிங்காதன மேறினர்.

இவ்வாறு பட்டயங்களிற் காணப்பட்டாலும், அவை நம்பத்தக்கன வல்லவென்றும், அவ்வாறுகாணப்படுவது உண்மையாயின் சித்தலிங்க மடத்திற் கல்வெட்டுக்காணப்படக் காரணமில்லையென்றும் சிலர் வாதிப்பர். சித்தலிங்கமடத்திற் காணப்படுவது கன்னரதேவனது ஐந்தாமாண்டுக்கல்வெட்டு. கன்னரதேவனான மூன்றாங்கிருஷ்ணன் கி. பி. 936-ல் இரட்ட அரசனானான். ஆகவே கி. பி. 941, 942-இவனது ஐந்தாமாண்டாகும். இந்த ஆண்டுகளையடுத்துவரும் ஆண்டுக்கல்வெட்டெல்லாம் அப் பக்கங்களிற் காணப்படல்வேண்டும். அதற்குமாறாகப் பராந்தகனது 36, 37, 39, 41-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றனவென்றும், காணப்படும் இவனது கல்வெட்டுக்கள் பதினான்காமாண்டுக்குமேலேயே காணப்படுகின்றனவென்றும் முன் யான் எழுதி வெளியிட்ட பராந்தகன் என்ற விஷயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், கி. பி. 914-ல் ஈழத்தரசனை வென்று அடிப்படுத்திய பராந்தகன் கன்னரதேவனைச் சும்மாவிட்டிருப்பானென்பது அசம்பாவிதமாம். அன்றியும், பராந்தகன் கி. பி. 953-வரை நாற்பத்தாறாண்டு ஆண்டானென்பதும் பொருந்தாதென்று முன்னரே காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகள் ஏலாவென்பதும், முன்னர்க்கூறியவாறே பராந்தகனுக்குப்பின் இராஜாதித்தன் சோழசிம்மாசனமேறினனென்பதும், அவ்வாறு ஏறினனும் பட்டாபிஷேகம் பெறவில்லையென்பதும் பெறப்படும். இவன் யானைமேலிருந்தபடி இறந்தமையால் இவனை யானைமேற்றுஞ்சியருளினதேவரென்பர். இவன், இராஜப்பிரதிநிதியாகத் திருநாவலூரில்தங்கித் தொண்டைமண்டலத்தைப் பாதுகாத்துவந்தானென்று சொன்னோம். இவனது படையில், சேரநாட்டினர்பலர் சேனைத்தலைமைவகித்திருந்தனரென்றும் கேரளநாட்டினர்பலர் காலாட்படையில் அமர்ந்திருந்தனரென்றும் திருநாவலூர்க் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றன.

இவனதுமனைவி பிருதிவீபதியின் மகள் மகாதேவ அடிகள் என்பவள். இவ்வம்மையின் தமயன் இராஜாதித்தனுக்குட்பட்ட சிற்றரசனாகையால், இவன், தன்னை இராஜாதித்தன்புகழ்விப்பவர்கண்டன்

என்று கூறிக்கொள்ளுகிறான். இராஜாதித்தன்போல் அரக்கோணத்திற்குச்சமீபத்திலுள்ள கீழ்ப்பாக்கத்தில் இராஜாதித்தீச்சுரமுடையார் கோயில் என்று ஒன்று உளது. அது இவனாற் கட்டப்பட்டிருக்கலாமென்பது கல்வெட்டிலாகாக்காரர் கொள்கை (No. 37 of 1911). ஆயினும், அது இவன் அந்த இடத்துக்கருகில் இறந்தபிறகு இவன் பேரால் பின்னோரெடுத்த ஆலயமாகவிருக்கலாமென்று தோற்றுகிறது.

இவனை நாட்டார் நன்குமதித்துவந்தனரென்றும் இவன்கீழிருந்த படைவீரர் போற்றிவந்தனரென்றும் அவனுக்குச் சிவாலயங்களில் வைத்த நொந்தாவிளக்குக்களால் வெளியாகின்றன.

இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை திருவாரூர்:
சோமசுந்தரதேசிகன்,

உலகியல்விளக்கச் சீர்தூக்குக்கட்டுரை.

பிரும்மஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியினால் எழுதப்பட்ட உலகியல் விளக்கத்திற்குச் சீர்தூக்குக்கட்டுரை ஆங்கிலத்தினாதல் தமிழினாதல் எழுதுவோருள்ளே சிறந்தனவென்று நல்லாசிரியர்களால் நன்குமதிக்கப் பெற்ற முதலாம் இரண்டாம் கட்டுரைகளுடையார்க்கு முறையே 150 ரூபாவும் 100 ரூபாவும் பரிசுகளாக வழங்கப்படும். கட்டுரை ஷ உலகியல்விளக்கப்பிரதி அளவிலே 60 பக்கங்கள் அச்சிடுதற்குப் போதியதாக அமைதல்வேண்டும்.

இக்கட்டுரை 1–6–27 க்குள் கீழ்க்குறித்தவிலாசத்திற்கு அனுப்பப் பெறுதல்வேண்டுமென இதுபோது முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,
ச. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

பிரதிபெறும் விலாசம்: பிரும்மஸ்ரீ. R. சுந்தராசாரியார், புலோலிகிழக்கு,
பருத்தித்துறை, இலங்கை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[சசஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

[பரதன், "தன் வரத்தால் தசரதன் சாவானென்றுதெரிந்தும், அந்த வசையை பேற்றுக்கொள்வாளாய், இவள் வரங்கொண்டது, என் பொருட்டென்றெண்ணி, இராமன் வனஞ்சென்ருன்; அப்படி யெண்ணாது சென்றிருந்தானானல், அரசன் இறந்த அன்றே திரும்பி யிருப்பான்; அவன் திரும்பாதது யான் அரசாள்வேனென்றெண்ணி யன்றே! இவள் கேட்ட வரம் காரணமாகச் சக்கரவர்த்தி என்னைப் பற்றி யெண்ணிய வெண்ணம் யாதாயினும் ஆகுக, இராமன் தனக்குப் பணிசெய்யும் யான் தீது நினைந்தேனென்று சிந்திக்கும்படிசெய்ததினும் இவள் எனக்குச் செய்யும் பெருங்கேடு யாதிருக்கின்றது! என் தமையன் காட்டிலே கையே கலமாக இலையே உணவாக வருந்தி அருந்திக் காலந் தள்ளாநிற்க, யான் நாட்டிலே செம்பொற்கலத்திலே செந்நெற்சோற்றை நறுநெய்பொழுக நுகர்ந்து இனிதுவாழ்கின்றேனென்று இந்த உலகோர் எண்ணாரோ! அவர்கள் அவ்வாறு நினையுமாறு, யான் இறவாமல் உயிரோடிருக்கின்றேனே!" என்ருன்.]

320. "வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன,
நல்லான் அன்றே துஞ்சினன் நஞ்சே அனையாளைக்
கொல்லேன், மாயேன், வன்பழி யாலே குறைவற்றே
னல்லே னேயான், அன்புடை யார்போல் அழுகின்றேன்".

இ-ள். "இராமன் கொடியகாட்டிலே சென்றானென்று கேட்டு, அதைப் (பொறுக்கமாட்டாதாய்க் கேட்ட) அப்போதே சக்கரவர்த்தி இறந்தான்! (அவனைக் கொன்ற) விடம்போன்றவளைக் கொல்கிலேன், யானும் சாகிலேன், கொடும்பழியுடைமையிற் குறைவற்றிருக்கின்றே னன்றே! (அப்படியிருந்தும்) அன்புடையார்போல அழுகின்றேன்! (இது வேடமென்றன்றே உலகம் எண்ணும்!)" [என்ருன் பரதன்.]

வில் ஆர் தோளான்—வில் தங்கிய தோளையுடையவன்—இராமன். நல்லான்—உத்தமன்; அறிஞன்; தசரதனையுணர்த்திபது. துஞ்சினன்—இறந்தான்,

321. "பாரோர் கொள்ளார்; யான் உயிர் பேணிப் பழிபூணேன்;
தீரா தொன்று னும்பழி; ஊரில் திருநில்லாள்;
ஆரோ டெண்ணிற் றார்உரை தந்தார்? அறமெல்லாம்
வேரோ டும்கே டாக முடித்தென் விளைவித்தாய்!"

இ-ள். "(யான் அரசனாவதை) உலகோர் ஒப்புக்கொள்ளார்; (அரசச்செல்வத்தோடுவாழும்) உயிர் (வாழ்க்கையை) விரும்பி, யான் (தமையனிருக்கத் தம்பி ஆள்கிறானென்னும்) பழிபூணமாட்டேன்; (யான் ஆள்வேனானால், அதனாலாகும்) பழி எதனாலும் தீராதாகும்; (அன்றி) இந் நகரத்திலே இலக்குமி தங்கமாட்டாள்; (இவ்வாறெல்லாமாக, இந்தக் கொடிய பழிக்கிடமான செய்கையைச்செய்ய, நீ) ஆலோசித்தது ஆரோடு? (இதைச் செய்யும்படி) ஆர் (உனக்குப் புத்தி) சொன்னார்? அனைத் தறமும் அடியோடழியும்படிசெய்து என்ன (பெருங்கேடு) விளையச் செய்துவிட்டாய்!" (என்றான் பாதன்.)

எண்ணிற்று - எண்ணியது. உரைதந்தார்-உரைத்தார். முடித்து - அழித்து. என் - என்ன; யாது. 'ஒன்றேதுன்புமிவ்வூரில்' என்றும் 'ஆருரைதந்தாய்' என்றும் பாடம்.

322. "கொன்றேன் நான்என் தந்தையை! மற்றுன் கொலைவாயால்,
ஒன்றே, கானத் தண்ணலை உய்த்தேன்! உலகாள்வான்
நின்றேன்! என்றால், நின்பிழை உண்டோ! பழியுண்டோ!
என்றே னுந்தான் என்பழி மாயும் இடம் உண்டோ!"

இ-ள். "(இராமனைக் காட்டுக்கோட்டி இராசனைக்கொன்றாயென்று தெரிந்தவுடனே இறந்திருத்தற்பாலேன், இறவாதிருக்கின்றேன், ஆகவே, உன் கொடிய செயல்களை யான் ஒப்புக்கொண்டேனாகி) என் தந்தையை யானே கொன்றேன் (ஆனேன்)! அது ஒன்றுதானோ, உனது (கணவன்) கொலை(க்குக்காரணமான உன்) வாயை (க் கருவியாக)க் கொண்டு, என் தலைவனைக் காட்டுக் கனுப்பினே (னும் ஆனே)ன்! (அப்படி அனுப்பி அரசை) ஆளவிருக்கின்றேன்! ஆனால், (அது என் பிழையன்றி) உன் பிழை (யாமாறு) இல்லை; (என்பழியன்றி) உன் பழி (யாமாறும்) இல்லை. எக்காலத்தேனும் என்பழி யொழியும்வழி யில்லை!" (என்றான் பாதன்.)

ஒன்றோ, எண்ணிடைச்சொல் ('பொய்படும் ஒன்றோ' என்ற குறள் உரை பார்க்க). 'உய்த்தேயுலகாள்வான்' என்றும் 'என்புகழ்மாயும்' என்றும் பாடம்.

323. "கண்ணா லேஎன் செய்வினை இன்னும் சிலகாண்பார்
மண்ணோர்; பாரா தெள்ளுவர்; வாளா பழிபூண்டாய்
'உண்ணா நஞ்சம் கொல்கில' தென்னும் உரையுண்டென்
றெண்ணா நின்றேன்; அன்றி இரேன்என் உயிரோடே"

இ-ள். "(இதுவரை உலகோர்கண்டது யான் உயிரோடிருத்தலையே. என் செயல்கள் இன்னும் சில (யான் அரசாள்வதற் கெதிராயிருப்ப) வற்றை மண்ணோர் கண்ணாலே காண்பார்; (அவை பின்பு - அடுத்த பாட்டிற்கூறுமாறு இல்வாழ்க்கை துறத்தலும் தவம் இயற்றலு மாம். அவர்கள் அவற்றைப்) பாராமல் (இருக்கும்வரையே என்னை) இகழ்வார்; (பார்த்தபின் இகழார்: நீ எனக்காகப் பெற்ற அரசை யான் ஆளேனாதலால்,) பயனின்றிப் பழிக்காளானாய்! (இராச்சியத்தை யான் ஏற்றுக்கொண்டாலன்றி, எனக்குப் பழியில்லை; ஏனெனில்,) 'உண்ணாதநஞ்சு கொல்லாது' என்ற உரையுண்டென் றெண்ணுகின்றேன். (இதுவே யான் இறவாதிருத்தற்கு நியாயம்.) அல்லாவிட்டால் யான் இறந்துவிடுவேன்'' (என்றான் பரதன்.)

எள்ளுதல்-இகழ்தல். வாளா-வீணாக. 'சிலர்காண்பார்' என்றும் பாடம். இராவணன்வதைப்படலம் 220-ம் பாட்டில் "உண்ணாதே உயிர் உண்ணா தொருநஞ்சு" என வருதல் காண்க.

324. "என்றுன் பாவிக் கும்பி வயிற்றின் இடைவைகித்
தோன்றும் தீராப் பாதகம் அற்றென் துயர்தீரச்
சான்றும் தானே நல்அறம் ஆகத் தகைஞாலம்
மூன்றும் காண, மாதவம் யானே முயல்கின்றேன்."

இ-ள். "உன்னுடைய நாகம்போன்ற வயிற்றினிடத்தே நான் இசைந்து தங்கியிருந்து பிறந்த தொலையாத பாவம் தொலைந்து, (அந்தப் பாவபலனான) என் துன்பமும் ஒழியத் தருமதேவதையே சாட்சியாக, மூன்றுலகத்தோரும் காணும்படி, நான் தவம் செய்வேன்'' (என்றான் பரதன்.)

என்று-இசைந்து. கும்பி-நரகம். 'பாவிக்கும்பி வயிறு' என்பதற்கு "பாவிபாகியநினது நரகினை ஒக்கும் வயிறு" என்றும் "பாவியான கும்பி போன்ற வயிறு" என்றும் உரைகள் உள: பாவிகளை (த் தன்னிடத்துர்) உடைய நரகம்போன்ற வயிறு என்றும் பொருள்கூறலாம்போலும். 'சான்றும்' என்பதில் உம்மை அசைநிலை. 'நல் அறம் தானே சான்று ஆக' எனக் கூட்டுக. தகை ஞாலம் மூன்றும்-தகுதியுடைய மூன்றுலகமும்-மூன்றுலகத்திலும் உள்ள தக்கோரெல்லாரும். தவம் முயலல்-தவஞ் செய்தல்.

325. "சிறந்தார் சொல்லும் நல்லுரை சொன்னேன்: செயலெல்லாம்
மறந்தாய் செய்தாய் ஆகுதி, மாயா உயிர்தன்னைத்
துறந்தா யாகில், தூயையும் ஆதி, உலகத்தே
பிறந்தாய் ஆதி; ஈதல தில்லை பிறி"தென்றான்.

இ-ள். "(அறிவிற்) சிறந்தார் சொல்லும் நல்ல வசனங்களைச் சொன்னேன். (நீ மாய்த்திருத்தற்குரியதாய்) மாயாதிருக்கின்ற உன் உயிரை (இப்போதேனும்) விட்டுவிடுவாயானால், (நீ செய்த கொடிய) செயல்களெல்லாவற்றையும் (தன் நினைவின்றி) மறந்துசெய்தாய் (ஆகக் கருதப்பட்டு உலகத்தோரால் மன்னிக்கப்பட்டவள்) ஆவாய்; (அன்றிப் பாவம்நீங்கிப்) பரிசுத்தையுமாவாய்; உலகத்திலே பிறந்ததனால் அடைதற்குரியபயனை அடைந்தவளுமாவாய்! (யான் உனக்குச்சொல்லக்கூடிய நல்ல ஆலோசனை) இதுவேயன்றி வேறு (எதுவும்) இல்லை." என்றான் (பரதன்).

ஆதி-ஆகுதி-ஆவாய். துறந்தாய் - விட்டாய். தூயை - பரிசுத்தமுடையாய்.

[பரதன் மேற்கூறியவாறு கூறி, "இனி இப் பாவிபக்கத்தி லிரேன், கோசலையைத் தொழுவேன்" என்று சொல்லிப் போய், அவளைக் கண்டு, மண்ணில்விழுந்து வணங்கி, அழுது அவள்பாதங்களைப் பற்றிக்கொண்டு புலம்புவானாய், —

"என் தந்தை எந்த உலகத்தில் இருக்கின்றான்! என் தமையன் எங்கே! யான் இந்தத் துன்பத்தைக் காணவோ இங்கு வந்தேன்! என் ஐயன் பூமியைவிட்டுப் போகலாமோ! போகாமற் றடுத்துப் பிடித்துக் கொண்டீரில்லை! தவறிப்போயினீர்! கொடியாள்வயிற்றிற் பிறந்த கொடியேன் உயிரை நீக்கித் துயரைப்போக்குவேன்! மாசற்ற சூரியவமிசம்

பரதனென்றொரு பாவி பிறந்த பழியைப் படைத்தது! சக்கரவர்த்தி வானமடைந்ததனாலும் தலைமகன் கானமடைந்ததனாலும் இந்நாட்டினர் இரண்டுகண்களையும் இழந்தார்போலத் துன்புறலானார்!" என்றான்.

கோசலை பரதன் துன்பத்தைப்பார்த்து, மாசற்ற மனத்தின னென்று தெளிந்து, மனம் நெகிழ்ந்து "கைகேயிசெய்த கபடத்தை அறியாய்போலும்" என்றாள். அதுகேட்டு, அவன் அளவற்ற துயரத்தை யடைந்து "அடியேன் அதனை அறிந்தவனாயின், பொய்யன் புரட்டன் புறங்கூறியவன் குடியன் கள்வன் கொலைஞன் தூர்த்தன் இரப்போர் பொருளை அடித்துப் பறித்தவன் தாய்பசித்திருக்கத் தான்புசித்திருந்த வன் அடைக்கலப்பொருளை அபகரித்திட்டவன் நன்றிமறந்தவன் என்ற இவர்கள் அடையும் நரகை அடைவேனாக" என்றான். இந்தச் சூளுரை யைக் கேட்ட கோசலை, பிரிந்துபோன இராமன் திரும்பிவரக்கண்டாள் போன்று, அவனை அழுது தழுவி "உன்குலத்துதித்த உயர்ந்தோர் ஒரு வரும் உன்னை ஒத்தார் இல்லை! நீ நீடுவாழ்க!" என்று மனங்குளிர வாழ்த்தினாள்.

அவன், அவள் பாதங்களிலே மீண்டும் வீழ்ந்து தாழ்ந்து, விம்மி அழுதுகொண்டிருக்கும்போது, வசிட்டன் வந்தான். அவனை அவன் அடிதொழுது அழுது "என் தந்தை எங்கேசென்றான்!" என்றான். அவன், யாது விடைகூறுவதென அறியானாய், அழுது, அவனைக் கட்டி அணைத்தான்; அப்பால், "உன் தந்தைக்கு ஈமக்கடன் இயற்றும்நாள் எய்தியது" என்றான். பரதன் கோசலையிடத்து விடைபெற்று, முனிவ னுடன் புறப்பட்டுச்சென்று, தந்தை சரீரத்தைக் கண்டு, கலங்கி அழுது, விழுந்து புரண்டெழுந்து எண்ணெயால் ஆட்டப்பட்டிருந்தானைக் கண் ணீரா லாட்டினான். அவனை ஒரு விமானத்திலேற்றி யீமக்கிரியை யியற்றக் கொண்டுபோனார்கள்.

அப்போது அயோத்திமாநகரமெங்கும் பேரிகைகளடிக்கச் சங்கங் கள் முழங்கியது, அந்த நகரம் மாதர்போல மார்பிலடித்து வாய்விட்டழு வதுபோன்றிருந்தது. மன்னவனுடலைக் கொண்டுசென்ற விமானம், மன்னனன்றி மற்றுப் பற்றற்ற மக்கட்பேறில்லாத மனைவியரனைவரும் உடன்வரச் சதுரங்கசேனை புடைசூழச் சென்று சரயுநதிக்கரையை அடைந்தது. செய்தற்குரிய ஈமக்கிரியைகள் செய்யப்பட்டபின், தச ரதன் சரீரம் *ஈமப்பள்ளியில் ஏற்றப்பட்டது.

---

* விறகுப்படுக்கை.

அருகேயிருந்தார் கூறியவாறு பரதன் தந்தைக்குச்செய்யுஞ் சடங்குசெய்யத் தொடங்கும்போது, வசிட்டன்வந்து "உன்தந்தை உன்னைத்துறந்தான்" என, அவன் இடிவிழுந்தவன்போன்று ஏங்கி. "என்குலத்தவர் யாவரே என்னைப்போலப் பிரேதபூசனைப்பேறிழந்தார்! யான் அவத்தனுயினேன்? இதுவோ என் அன்னை எனக்குச்செய்த நன்றி!" என்று வருந்தினுன். (அவத்தன்-அவமுடையவன்; பிரயோசன மில்லாதவன்.) சத்துருக்கனுற் சடங்குகள் முற்றுவிக்கப்பட்டன. இலைமறைய, மலர் நிறைய மலர்ந்த செந்தாமரைத் தடாகத்துள்ளே திரளான அன்னங்கள் சென்றாற்போலத் தேவியர்கள் தீக்குளித்தார்கள்.

[எல்லாரும் அரண்மனைக்குத் திரும்பினுர்கள். கருமத்துக்குரிய பத்துநாட்களும் கழிந்தபோது, பாதன்பால், வசிட்டன் வந்தான். அப்போதே, மந்திரிகள் மன்னனின்றியிருத்தல் மாபன்றென்று, அக்குறையை நீக்குங்கருத்தினாய்க் கோசலநாட்டறிஞர்கூட்டத்துடன் பாதனைக் கண்டு தங்கருத்தைத் தெரிவித்தற்குவந்தார்கள்.]

பள்ளி அடைப்படலம் முற்றிற்று.

ஆற்றுப்படலம்.

காட்டுக்குத் துறவியாகச் சென்ற இராமனை நாட்டுக்கு அரசனுக அழைத்துவாப் பாதன் சென்றவழியில் நிகழ்ந்த சரிதங் கூறுவது. (ஆறு—வழி)

[மந்திரி முதலியோர் பாதனை அடைந்து வணங்கினர். அப்போது, முதன்மந்திரி சுமந்திரன் பாதனுடனிருந்த வசிட்டனைநோக்க, அவன், அந்த நோக்கத்தால் அவர்கள்வந்தநோக்கத்தை, வாக்கினுல் தெரிவிக்க வேண்டாமலே, தெரிந்துகொண்டு, பாதனை நோக்கி "இவர்களெல்லாரும் வந்த காரியம் நீ நிருபனுகி நீதிசெலுத்தவேண்டுமென்பது. அது நீ செய்தல் அவசியம்" என்றுன்.]

326. "வள்ளுறு வயிரவாள் அரசில் வையகம்,
நள்ளுறு கதிர்இலாப் பகலும் நாளொடும்
தெள்ளுறு மதிஇலா இரவும் தேவுடன்
உள்ளுறை யுயிரிலா உடலும் ஒக்குமே."

இ-ள். "அரசனில்லாத நாடு, சூரியன் இல்லாத பகலையும் நட்சத்திரங்களுடன் சந்திரன் இல்லாத இரவையும் இறைவனுடன் உயிரில்லாத உடலையும் ஒக்கும்." (என்றுன் வசிட்டன்).

வள்-கூர்மை. வயிரம்-வலி. வையகம்-உலகம்-நாடு. நள்-நடு. கதிர்-சூரியன். நள் உறு கதிர்-(சூரிய மத்திய சித்தாந்தப்படி எல்லாக் கிரகங்களும் தன்னைச் சூழ) நடுவில் உறுகின்ற சூரியன். தெள்ளுறுதல்-தெளிதல். தெள்ளுறுமதி-தெளிவான (-தெளிவான கண்ணாடிபோல நன்கு விளங்குகின்ற) சந்திரன். தேவு-தெய்வம். 'நாடொறும்' என்றும் 'தேர்வரும்' என்றும் பாடம்.

["தேவருலகத்தேனும் அசுரருலகத்தேனும் மற்றும் ஏவருலகத்தேனும் இராசன் இல்லாமையைக் கண்டிலேம். நிரபதியில்லாத நாடு, மாலுமியில்லாத மரக்கலம். உன் தந்தை யிறந்தான். தமையன் துறந்தான். அவர்பின் அரசை ஆளுதற்குரியவன் நீயே. அன்றியும், அரசு, உன்தாய் பெற்றதாய் உனக்கு உரியதாயுள்ளது. ஆதலால், இராச்சியபாரத்தை நீ ஏற்றுக்கொள்ளும்படி யாங்களெல்லேங்களும் வேண்டுகின்றேம்" என்றான் வசிட்டன். அது கேட்ட பரதன், விடமுண்ணும்படிவேண்டப்பட்டான்போல, உடம்பு நடுங்கி, உயிர் ஒடுங்கி, நாக்குத் தடுமாற வாக்குக் குளறக் கூறுவானாய்,—

"மூன்றுலகுக்கும் முதல்வனாக முறைசெலுத்தி ஆளுதற்குரிய முன்னோனிருக்கவும், என்னை முடிசூடும்படி சான்றோர்சாற்றுதலால், அதருமம் தருமமாகி என்னை யீன்றாள் கொடியசெய்கை குற்றமற்றதாகின்றது. இது, இன்னும் இரண்டுயுகங்கள் இறந்தபின் எய்தற்பாலதாகிய கலியின் இராசரிகம் இப்போதே எய்தியதோவென எண்ணச்செய்கின்றது. இன்றளவும், மூத்தோனிருக்க, இளையோன் முடிசூடியதுண்டோ! அப்படிச் செய்வது அறமன்று; அறமேயாயினும், அதற்கு யான் இசையேன்" என்றான். எனவே, எல்லாரும் அகம் மிக மகிழ்ந்து "தம்பியருள் உன்னை ஒப்பார் ஒருவரும் இல்லை" என்று கூறி "நின் புகழ் என்றும் நின்று நிலவுக" என்று வாழ்த்தினார்கள்.

பரதன், சத்துருக்கனைத் தருவித்து "நம் அண்ணனை அரசனாக அழைத்துவரப்போகின்றோமென்று முரசறைவித்து, அதற்குச் சேனையை நம்முடன் புறப்படுவதற்குச் சித்தமாகும்படிசெய்வாயாக" என்றான். விடத்தினால் உயிர்நீங்கியிருந்த உடல் அமிழ்தத்தினால் உயிர் மீளப்பெற்றாற்போல, இராமன்பிரிவால் உயிர் பிரிந்தார்போன்றிருந்த அயோத்திநகரமாந்தர்கள், அச்செய்தியால் உயிர்த்தெழுந்தார்கள்.

பரதன் இராமனை முடிசூட்ட அழைத்துவரப்போகின்றானென்ற செய்தி சந்திரன்போலச் சேனை சந்திரோதயங்கண்ட சமுத்திரம் போன்று, ஆரவாரித்தெழுந்து படர்ந்து மண்ணைமறைத்தது; அதன் கொடிகள் பரந்து விண்ணை மறைத்தன; அதன் தூள்கள் பறந்து கண்ணை மறைத்தன. அளவற்ற அந்தச்சேனையைத் தாங்குதற்கு ஆற்றலுடையதான பூமியைப் பூமகளென நாமகரணஞ்செய்து மெல்லியல் என்றோர் அறிவில் மெல்லியர்போலும் (மெல்லியல் - மென்மையான தன்மையையுடையவள் - வன்மையில்லாதவள் - பெண் மெல்லியர்-மென்மையுடையவர்-வன்மையில்லாதவர்.)

இராமன் காடுறைதலால், மாதர்கள் ஆபரணங்கள் கழித்தவராய்ப் பூ உதிர்ந்த கொம்புகள் போன்றனர்; தீட்டிய மை அழிக்கப்பட்ட அவர்களுடைய கண்கள், ஊட்டிய விடம் கழுவப்பட்டவேல்களை ஒத்தன; அறிவில்லார்கூட்டத்தில் வாய்திறவாத அறிவாளர்போல, வாத்தியங்கள் ஒலியாமலிருந்தன. இயல்பாக எப்போதும் அளவற்ற சன சஞ்சாரமுள்ள அயோத்திநகரவீதிகள், அந்நகரத்துச் சனங்களுடன் சைநியம் வெளிப்பட்டபோது குறுமுனிகுடித்த கடல்போல வெறுமையாயிருந்தன. சேனையும் சனங்களும் சென்றவழிகள் ஆள்வழக்கு மிக்க அத்தெருக்களை ஒத்தன.

சேனை முன்செல்லப் பரதன், மரவுரி உடுத்துத் துக்கம் மிக்கவனாய்ச் சத்துருக்கனுடன் தேர்மீது சென்றான். தாய்மாரும் சுற்றத்தாரும் மந்திரிகளும், மாதவரும் மறையவரும் சென்றார்கள். எல்லாரோடும் கூனியும் கூடவரக் கண்ட சத்துருக்கன் கோபித்துக் கொல்லப் பற்றியபோது, பரதன்பார்த்து, "இவள் எல்லாத் துன்பங்களுக்கும் ஏதுவாயிருந்தாளென்றாலும், இவளைக்கொல்லாதுவிடு; இவளைக் கொல்லுதல் கிடக்க, கோபித்தலுமே இராமன் வெறுப்பதாம். இவளையும் கூட்டிக்கொண்டு செல்வோம்' என்று கூறிச்சென்றான். அவன், இராமன் தங்கிய சோலையிலே தங்கிக் கண்ணீர் அருவியாகப் பெருகி வடிய இலை காய் கனி கிழங்கெதுவும் தொடானாய், இராமன் இருந்த புல்லாசனத்தின்பக்கத்திலே புழுதியிலே யிருந்தான். அவ்விடத்திலிருந்து இராமன் பாதசாரியாய்ச் சென்றானென்று, தானும் வாகனமேறானாய், ஆனைகளும் குதிரைகளும் தேர்களும் சிவிகைகளும் தொடர்ந்துவர, நடந்துபோனான்.]

ஆற்றுப்படலம் முற்றிற்று.

(தொடரும்.)

வெ ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்வப்ன வாசவ தத்தம்.

[சாகுந்தலப்பக்கத் தொடர்ச்சி.]

நான்காம் அங்கம்.

(விதூஷகன் வருதல்.)

விதூஷகன்:— (சந்தோஷத்துடன்) ஹா! தெய்வானுகூலந்தான், நமது வத்ஸராஜனுக்கு நான் விரும்பியபடி ஆனந்தகரமான மங்கல நாள் வரக்கண்டேன். ஆ! அத்தகைய துன்பப்பெருஞ்சுழியில் அழுந்தினபிறகு மீண்டும் கரையேறுவோமென்று யாவரே எண்ணியிருந்தனர்? இப்பொழுதோ நாங்கள் அரண்மனைகளில் வஸிக்கிறோம்; அந்தப்புர வாவிகளில் ஸ்நானம் செய்கிறோம்; நேர்த்தியான மிக இனிய மோதகங்களை அருந்துகிறோம்;—இப்பொழுது நான் அனுபவிப்பது ஸ்வர்க்கசுகமென்னலாம்; அரம்பையர்மட்டுந்தான் குறை. ஆனால் ஒரு பெரிய கஷ்டமிருக்கிறது. நான் புஜிப்பது நன்றாய் ஜீரணமாகிறதில்லை. மெல்லிய விரிப்பு விரித்த படுக்கையிலும் தூக்கம் வருவதில்லை. வாதரோகம் என்னைப் பற்றிக்கொண்டதோவென்று தோற்றுகிறது. மிதபோஜனமும் ஆரோக்கியமும் அற்ற இடத்தில் என்ன சுகம் இருக்கிறதப்பா!

(ஓர் சேடி வருதல்.)

சேடி:— எங்கேதான் போனார் வஸந்தயர்? (உலாவிப் பார்த்து) ஆ! இதோ இருக்கிறார் வஸந்தகர்; (அடுத்துச்சென்று) ஐயா! வஸந்தகரே! எவ்வளவுகாலமாக உம்மைத் தேடுகிறேன்.

விதூ:— (சேடியைப்பார்த்து) அம்மா! எதற்காகத் தேடுகிறாய்?

சேடி:— மாப்பிள்ளை ஸ்நானம்செய்தாரோவென்று மஹாராணி கேட்கிறார்.

விதூ:— எதற்காகக்கேட்கிறார்?

சேடி:— வேறு எதற்கு; அவருக்குப் புஷ்பமும் சந்தனமும் கொண்டு வரவேண்டுமென்றுதான்.

விதூ:— அவர் ஸ்நாநம்செய்தாய்விட்டது; நீ சென்று உணவுதவிர வேண்டுவவெல்லாம் கொண்டுவா!

சேடி:— ஏன் உணவை விலக்குகிறீர்?

விதூ:— நான் பாக்கியமற்றவன், குயில்களுக்குக் கண்பிறழ்வதுபோல் எனக்கு வயிற்றுப்பிறழ்ச்சி வந்திருக்கிறது.

சேடி:— நீர் அப்படியே யிருந்துதொலையும்.

விதூ:— அடீ! போ. நான் அரசரிடம் போகிறேன்.

(இருவரும் செல்லுதல்)

(பரிவாரத்துடன் பத்மாவதியும் ஆவந்திகையும் வருதல்).

சேடி:— இளவரசி! என்னகாரணமாக இந்தப் பிரமதவனத்திற்கு வந்தீர்கள்?

பத்மா:— அடீ! அந்தச் சேபாலிகைக்கொடிகள் புஷ்பித்தனவா என்று பார்க்கவந்தேன்.

சேடி:— இளவரசி! அவை புஷ்பித்திருக்கின்றன; இடையிடையே பவழம்கோத்த முத்துமாலைகள்போற் புஷ்பங்கள் நிரம்பி யிருக்கின்றன.

பத்மா:— ஆனால் ஏன் தாமதிக்கிறாய்?

சேடி:— இளவரசி! இதோ நான் பூப்பறித்துவிட்டேன். சற்று இக் கல்மேடையில் உட்காரவேண்டும்.

பத்மா:— (ஆவந்திகையை நோக்கி) ஸகீ! நாம் இங்கு இருப்போமா?

ஆவந்தி:—அப்படியே! (இருவரும் உட்காருதல்).

சேடி:— இளவரசி! இதோபார், மனோசிலைபோற் பாதிசிவந்த சேபாலிகைப்புஷ்பங்கள் என் இருகைகளிலும் நிறைந்திருக்கின்றன.

பத்மா:— ஸகீ! ஆ! புஷ்பங்கள் எவ்வளவுவிசித்திரமாயிருக்கின்றனபார்!

ஆவந்தி:—ஆமாம்; இம்மலர்கள் கண்ணுக்கு இனிமைதான்.

சேடி:— இளவரசி! இன்னும் பறிக்கவேண்டுமோ?

பத்மா:— அடி! வேண்டாம்; பறித்தது போதும்.

ஆவந்தி:—ஏன் போதுமென்று விலக்குகிறாய்?

பத்மா:— காதலர் இங்கு வந்து பூக்களின் செழிப்பைக்கண்டு என்னைச் சம்மானிப்பார்.

ஆவந்தி:— ஸகி! உன் காதலர் மனத்துக்கிசைந்தவர்தானா?

பத்மா:— ஸகி! அது எனக்குத் தெரியாது; அவரைப்பிரிந்தால் துன்புறுகிறேன்.

ஆவந்தி:—(தனக்குள்) இவளுங்கூட இவ்விதம் சொல்லுகிறாளே! நான் பிரிந்திருப்பது கடினமன்றோ.

சேடி:— இளவரசி! காதலர் உனக்குப் பிரியமானவர் என்று சொன்னது அழகே.

பத்மா:— ஆனால் எனக் கொரு சந்தேகமுண்டு.

ஆவந்தி:—என்ன! என்ன சந்தேகம்?

பத்மா:— என்னைப்போல வாஸவதத்தையும் காதலரை நேசித்தனளோ என்று.

ஆவந்தி:—இதைவிட அதிகமாக.

பத்மா:— ஸகி! நீ எப்படியறிவாய்?

ஆவந்தி:—(தனக்குள்) ஆ! என் காதலர்மீதுள்ள அன்பினால் என் நிலைமையை மறந்துவிட்டேன். இருக்கட்டும்; இவ்விதம் சொல்லுகிறேன். (உரக்க) அவளது அன்பு அற்பமானால் தன் உறவினரைத் துறந்து போயிருக்கமாட்டாள்.

பத்மா:— இருக்கலாம்.

சேடி:— இளவரசி! வீணைகற்பிக்கவேண்டுமென்று காதலரிடம் வற்புறுத்திக்கேள்.

பத்மா:— அவரிடம் கேட்டாயிற்று.

ஆவந்தி:—என்ன விடையளித்தார்?

பத்மா:— ஒன்றும் சொல்லவில்லை; அவர் பெருமூச்சுவிட்டு மௌனமாயிருந்தார்.

ஆவந்தி:—அதிலிருந்து என்ன ஊகிக்கிறாய்?

பத்மா:— வாஸவதத்தையின் அருமையான குணங்களை நினைத்தவர் தாக்ஷிண்யத்தால் தம் கண்ணீரை என்முன் அடக்கிக்கொண்டார் என்று நினைக்கிறேன்.

ஆவந்தி:—(தனக்குள்) இஃது உண்மையானால் நான் பாக்கியவதிதான்.

(உதயனனும் விதூஷகனும் வருதல்)

விதூ:— (உரக்கச்சிரித்து) மந்தாரபுஷ்பம் மிகவிழுந்து இந்தப் பிரமத வனம் ரமணீயமாயிருக்கிறது. அரசே! இங்குவரவேண்டும்.

உதயனன்:—நண்ப! வஸந்தக! இதோ வருகிறேன். நான் உச்சயினி சென்று அவந்திவேந்தன்புதல்வியைக் கண்ணாரக்கண்டு சொல்வதற்கரியதோர் அவஸ்தையடைந்ததும் மன்மதன் தனது ஐங்கணைகளையும் என்மேல் எய்துதீர்த்தான். அவை இன்னும் என் நெஞ்சத் துறுத்துகின்றன. மீண்டும் அவன் பாணத்தால் துளைக்கப்படுகிறேன். அவன் பஞ்சபாணனுல் ஆறுவது எய்வதற்குப் பாணம் எவ்வாறுகிடைத்தது?

விதூ:— அரசி பத்மாவதி எங்கே போயிருக்கலாம்! லதாமண்டபத்திற்குச் சென்ருளா? அல்லது அசனப்பூ விழுந்து புலித்தோல் போர்த்ததுபோல் விளங்கும் பர்வததிலகமென்ற கல்மேடைக்குச் சென்ருளா? அல்லது மிகக்கடுமணம்வீசும் எழிலைப்பாலைவனத்திற்குப் போனுளா? அல்லது விலங்குகளையும் பறவைகளையும் சித்திரமெழுதி அலங்கரித்திருக்கும் தாருபர்வதத்திற்குச் சென்றனளா? (ஆகாசத்தைப்பார்த்து) ஹா! ஹா! அரசே! சரத்காலத்தில் நிர்மலமான ஆகாசத்திற் பலதேவனது நீண்டபுஜங்களையொத்த ஸாரஸப்பறவையின் அழகிய வரிசை அமைதியாய்ப் பறந்துபோவதைப் பாரும்.

உதயனன்:—ஆம் ஆம்; நண்ப! இதோபார்க்கிறேன்; சட்டைகழற்றிய அரவத்தின்வயிறுபோலும் வெண்ணிறமான ஆகாசத்தைக் கூறிட்டுவகுத்ததுபோல்விளங்கும் இப்புள்ளினம் ஒழுங்காயும் நீண்டும் இடையிடையே அற்றும் தாழ்ந்தும் உயர்ந்தும் திரும்புமளவில் ஸப்தரிஷிமண்டலம்போல் வளைந்தும் காணப்படுகின்றன.

சேடி:— இளவரசி! இதோ பார்! பார்! உற்பலமாலைபோல் வெண்மையாய் மனதைக்கவரும் ஸாரஸப்பறவைகள் அமைதியாகப் பறந்துசெல்கின்றன. ஆ! இதோ அரசர்வந்திருக்கிருரே!

பத்மா:— ஆ! என்காதலரா! ஸகி! உன்நிமித்தம் நானும் காதலர்பாராதபடி மறைகிறேன்; இந்த மாதவிப்பந்தற்குட்போவோம் வா!

ஆவந்தி:—அப்படியேசெய்வோம்.

(மாதவிப்பந்தலுக்குச் செல்லுதல்)

விதூ:— அரசே! பத்மாவதியரசி இங்கே வந்துபோயிருக்கவேண்டும்.

உதயனன்:—உனக் கெப்படித் தெரிந்தது?

விதூ:— இச் சேபாலிகைக்கொடிகளில் மலர்கொய்திருப்பதைப்பாரும்.

உதயனன்:—ஆ! வஸந்தக! இம்மலர்கள் என்ன விசித்திரமாயிருக்கின்றன!

ஆவந்தி:—(தனக்குள்) வஸந்தகன் என்ற பேச்சைக்கேட்டதும் நான் உச்சயினியில்தானிருக்கிறேனே என்று நினைக்கிறேன்.

உதயனன்:—வஸந்தக! இக் கல்மேடையில் உட்கார்ந்து பத்மாவதியின் வரவை எதிர்பார்ப்போம்.

விதூ:— அப்படியே! (உட்கார்ந்து உடன் எழுந்து நின்று) கோடைக் காலத்து வெயிலின்கடுமை பொறுக்கமுடியவில்லை. இந்த மாதவிப்பந்தலுக்குள்ளே செல்வோம்.

உதயனன்:—ஆகட்டும். நீ முன்னே செல்.

விதூ:— உத்தரவு. (இருவரும் செல்லல்)

பத்மா:— வஸந்தகன் எல்லாவற்றையும் கெடுத்துவிடப்போகிறானே! நாம் இப்பொழுது என்ன செய்பலாம்?

சேடி:— இளவரசி! தேனீக்கள்மொய்த்திருக்கும் இவ் அடிக்கொடியை அலைத்துத் தலைவர் இங்கு வராமற் செய்துவிடுகிறேன்.

பத்மா:— அனல் அப்படிச்செய்! (சேடி கொடியை அசைக்க)

விதூ:— ஐயையோ! பெருமானே! நில்லும், நில்லும்.

உதயனன்:—ஏன்?

விதூ:— இக் கொடிய தேனீக்கள் என்னை வருத்துகின்றன.

உதயனன்:—வஸந்தக! விடு! விடு! தேனீக்களைப் பயப்படுத்தக்கூடாது. மதுவுண்டுமயங்கிச் சுகமாய் ரீங்காரம்செய்யும் இத்தேனீக்கள் காமத்தால் வருந்தும் தன் காதலிகளைத் தழுவிநிற்கின்றன. காலடிவைத்து அவைகளைக் கலைத்தால், காதலியைப் பிரிந்த நம்மைப்போல் அவைகளும் பிரிவாற்றாமல் துக்கமடையும். அதனால் நாம் இங்கேயே இருப்போம்.

விதூ:— ஆகா! அப்படியே! (இருவரும் உட்காருதல்).

சேடி:— இளவரசி! நாம் சிறையிலன்றோ அகப்பட்டோம்.

பத்மா:— நல்லகாலம். காதலர் உட்கார்ந்துவிட்டார்.

ஆவந்தி:—(தனக்குள்) நல்லகாலம். என்நாதன் சௌக்கியமாயிருக்கிறார்.

சேடி:— இளவரசி! இவ்வம்மையின்கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறதே!

ஆவந்தி:—ஒன்றுமில்லை. அடங்காத இத்தேனீக்கள் பறத்தலாற் காசப் பூந்துகள் கண்களில் விழுந்து கண்ணீர் வருகின்றது.

பத்மா:— சரிதான்.

விதூ:— அரசே! இந்தப் பிரமதவனம் ஏகாந்தமாயிருக்கிறது. தங்களிடம் எனக்குக் கேட்கவேண்டியதொன்றுள்ளது. கேட்கலாமா?

உதயனன்:—ஆகா! இஷ்டம்போல்.

விதூ:— உமக்குப்பிரியமானவள் யார்? முந்தின வாஸவதத்தையா? அல்லது இப்பொழுது வந்திருக்கும் பத்மாவதியா?

உதயனன்:—ஏன் இந்தப் பெரிய தர்மஸங்கடத்திற் கொண்டுவிடுகிறாய்?

பத்மா:— காதலர் எத்தனை ஸங்கடத்தில் அகப்பட்டுவிட்டார்.

ஆவந்தி:—(தனக்குள்) பாக்கியங்கெட்ட நானும் இதைக் கேட்கும்படி ஆயிற்றே.

விதூ:— அரசே! தைரியமாகச்சொல்லும். ஒருத்தி இறந்துவிட்டாள்; மற்றவள் ஸமீபத்திலில்லை.

உதயனன்:—நீ ஒரு வாயாடி. நான் சொல்லவேமாட்டேன்.

பத்மா:— இதனாலேயே அவர்சித்தம் வெளியாயிற்று.

விதூ:— அரசே! நான் ஒருவரிடமும் சொல்லமாட்டேன். சத்தியம் செய்து ஆணையிடுகிறேன்; இதோ என் நாவைத் தடுத்துக் கொண்டேன். (நாவைக் கடித்துக்கொள்ளுதல்.)

உதயனன்:—ஆனாலும் நண்ப! உன்னிடம் சொல்லத்துணியவில்லை.

பத்மா:— என்ன இவனது பேதமை! இவ்வளவுசொல்லியும் அவரது உள்ளத்தை யறியவில்லையே!

விதூ:— என்ன! என்னிடம் சொல்லமாட்டீரா! சொல்லாவிட்டால் இந்தக் கல்மேடையிலிருந்து உம்மால் ஓர் அடிகூட நகரமுடியாது. உம்மை நான் இங்கே கட்டுப்படுத்தியிருக்கிறேன்.

உதயனன்:—பலாத்காரமாகத்தானா?

விதூ:— ஆமாம். பலாத்காரமாகவே.

உதயனன்:—ஆனால் பார்ப்போம்.

விதூ:— பொறுக்கவேண்டும்; பொறுக்கவேண்டும். அரசே? உண்மை சொல்லாவிடின், உம்மை அன்பினாலேயே கட்டுப்படுத்தியிருக்கிறேன்.

உதயனன்:—இப்பொழுது வேறுகதியில்லை. சொல்லுகிறேன் கேள். வடிவழகு, நற்சீலம், இன்சொல் என்ற குணங்கள்நிமித்தமாகப் பத்மாவதியை நன்குமதிக்கிறேன். ஆனால் வாஸவதத்தையிடம் ஈடுபட்ட என்னுள்ளத்தைக் கவர அவள் வல்லவளல்லள்.

ஆவந்தி:—(தனக்குள்) நல்லது; நான்படுந் துயரத்துக்குக் கூலி கிடைத்தது. இந்த அஞ்ஞாதவாஸமும் எனக்குப் பெருநன்மையை விளைக்கிறது.

சேடி:— இளவரசி! பர்த்தா நடுநிலைமையுள்ளவரல்லர்.

பத்மா:— அடீ! அப்படியில்லை. இப்பொழுதும் வாஸவதத்தையின் சிறந்தகுணங்களைநினைக்கும் என் அன்பர் நடுநிலைமையுள்ளவரே!

ஆவந்தி:—என் செல்வியே! உன்குலப்பெருமைக்கொத்தபடி சொன்னாய்!

உதயனன்:—நான் சொல்லிவிட்டேன். இனி நீ சொல்; யார் உனக்குப்பிரியமானவள்? முந்தின வாஸவதத்தையா? அல்லது இப்பொழுதிருக்கும் பத்மாவதியா?

பத்மா:— என்காதலரும் இப்பொழுது வஸந்தகனாய்விட்டார்.

விதூ:— வீண்பேச்சு எதற்கு? அவர்களிருவரும் எனக்குப் பிரியமானவர்களே.

உதயனன்:—மூர்க்க!என்னிடமிருந்து வலிந்துதெரிந்துகொண்டு நீ இப்பொழுது சொல்லமாட்டேன் என்கிறாயா?

விதூ:— என்ன! என்னிடமும் பலாத்காரமாகத்தானா?

உதயனன்:—ஆமாம்; பலாத்காரமாகவே.

விதூ:— ஆனால் என்னிடமிருந்து கேட்கமுடியாது.

உதயனன்:—மஹாப்ராமணா! பொறுக்கவேண்டும்; உமது சித்தம்போலச் சொல்லவும்.

விதூ:— இப்பொழுது சொல்லுகிறேன் கேளும்; வாஸவதத்தையிடம் எனக்குப் பஹுமானந்தான். ஆனால், பத்மாவதி யௌவனமும் ஸௌந்தரியமும் பொருந்தியவள்; சாந்தம் செருக்கின்மை இன்சொலுடைமை, தாட்சிணியம் என்ற குணங்கள்நிறைந்தவள். தவிர வேறொரு சிறந்தகுணமும் அவளிடம் உள்ளது,—அதாவது—"வஸந்தகர் எங்கேபோனார்" என்று சொல்லிச் சுவையுள்ள போஜனத்துக்கு என்னை எதிர்பார்க்கிறாள்.

ஆவந்தி:—(தனக்குள்) இருக்கட்டும்; வஸந்தக! இப்பொழுதுகூறியதை நினைப்பில் வைத்துக்கொள்.

உதயனன்:—வஸந்தக! ஆகட்டும்; இவையெல்லாம் வாஸவதத்தையிடம் சொல்லுகிறேன்.

விதூ:— ஓ! வாஸவதத்தையா! எங்கே வாஸவதத்தை! அவளிறந்து வெகுகாலம்ஆய்விட்டதே!

உதயனன்:—(துக்கம்தோன்ற) ஆமாம்; வாஸவதத்தை இறந்துவிட்டாள். இந்தப் பரிகாசத்தால் என்மனத்தைத் திகைப்பித்தனை; முன்புள்ள பழக்கத்தால் தழும்பேறிய நாவினின்றும் இச் சொல் வந்துவிட்டது.

பத்மா:— ரஸகரமான ஓர்பேச்சையன்றோ இம்மூர்க்கன் கெடுத்துவிட்டான்.

ஆவந்தி:—(தனக்குள்) நல்லது. என் மனம் திடமாயிற்று. இத்தகைய சொற்களை மறைவிற்கேட்பதில் ஆ! என்ன இன்பம்!

விதூ:— திடமாயிருக்கவேண்டும்; பெருமானே! தலைவிதி தடுக்கத்தக்கதன்று. இப்பொழுது விதி இவ்வாறாகவுள்ளது.

உதயனன்:—நண்ப! நான் படும்பாடு நீ அறியாய்; வேரூன்றின காதலை மனத்தினின்றும் பிடுங்கியெறிவது மிகக்கடினம். நினைக்

நினைக்க விசனம் புதிதுபுதிதாக வளருகிறது. கண்ணீர் வடித்துக் கடமையைச்செலுத்தியபிறகுதான் மனம் தேறுதலடைகிறது. இது உலகவியல்பு.

விதூ:— அரசே! முகம் கண்ணீரால் நனைந்துவிட்டதே! முகம் கழுவ நீர் கொண்டுவருகிறேன். (போகிறான்.)

பத்மா:— அம்ம! கண்ணீர்ப்பெருக்கு, காதலர்முகத்தை மறைத்துவிட்டது. நாமிங்கிருந்து மெல்ல நழுவுவோம்.

ஆவந்தி:—அப்படியே; அல்லது சற்று நீ இங்கேயிரு. கவலைப்படும் காதலரைப்பிரிந்து வெளியேபோவது தக்கதன்று. நான் மட்டும் போகிறேன்.

சேடி:— இந்த அம்மாள் சொல்வது சரியே. இளவரசி! உன்கணவரிடம்செல்.

பத்மா:— நான்செல்லவேண்டுமா?

ஆவந்தி:—ஆமாம். ஸகி! செல்.

(ஆவந்திகை வெளியே போதல்)

(விதூஷகன்வருதல்)

விதூ:— (தாமரையிலையில் நீர்எடுத்து) இதோ அரசி பத்மாவதி!

பத்மா:— ஐய! வஸந்தகரே! என்ன இது?

விதூ:— இது-அது, அது-இது,

பத்மா:— சொல்லுமையா! சொல்லும்;

விதூ:— காற்றடித்துக் காசப்பூந்துகள் கண்களில்விழக் கண்ணீரால் அரசர்பெருமானது முகம் நனைந்தது. அவர் முகம்கழுவ இந்நீரை அரசி கொண்டுசெல்லவேண்டும்.

பத்மா:— (தனக்குள்) அன்பரின் ஏவலாளரும் அன்புடையரே! (அடுத்துச்சென்று) எனது தலைவர் வெற்றிபெறுக. முகம் சுத்திசெய்யத் தண்ணீர் இது.

உதயனன்:—ஆ! பத்மாவதியா! (விலகி) வஸந்தக! இதென்ன?

விதூ:— (காதுக்குள்) அது இப்படி.

4

உதயனன்:—வஸந்தக! நன்று நன்று; (ஆசமனம்செய்து) பத்மாவதி! உட்காரவேண்டும்.

பத்மா:— அன்பர் உத்தரவுப்படி. (உட்காருதல்.)

உதயனன்:—பெண்ணே! பத்மாவதி! சரத்காலசந்திரனைப்போல் வெண்மையான காசப்பூந்துகள் காற்றடித்துக் கண்களில்விழக் கண்ணீர்பெருகி முகத்தில் வழிந்தது. (தனக்குள்) இவள் ஓர் சிறுபெண். இப்பொழுதுதான் மணஞ்செய்யப்பெற்றவள். உண்மையறிந்தால் விசனம் அடைவாள். சுபாவத்தில் தைரியமுடையவளாயிருக்கலாம்; ஆனால் அச்சம் பெண்களுக்கு இயல்பான குணமாகுமே.

விது:— அரசே! உம்மைமுன்னிட்டு மகதவரசர் தம் நண்பர்களுக்கு இன்று பிற்பகலிற் காட்சிகொடுப்பர். உபசாரத்தை ஆதரவுடன் ஏற்றாலன்றோ அன்புபெருகும். அதனாற் பெருமான் எழுந்திருக்கவேண்டும்.

உதயனன்:-சரி, நீ சொன்னது மேன்மையானகருத்தே. (எழுந்திருந்து) இவ்வுலகிற்பெருங்குணங்களும் பொன்புமுடையாரை எளிதிற் காணலாம். ஆனால் அவர்செயல்களையறிந்துமதிப்போரைக் காண்பதரிது.

(எல்லாரும் போதல்)

நான்காம் அங்கம் முற்றிற்று.

(தொடரும்.)

ஜி. ஹரிஹரசாஸ்த்ரி.

திருவநந்தபுரம்.

தமிழ்ச்சொல்லமைப்பு.

யான் தமிழ்ச்சொற்களின் அமைப்பினை அறிந்துகோடற்குப் பல்லாண்டுகளாக விழைந்து துருவிவந்தேன். அத்துருவுகைகாரணமாகப் பலப்பலவற்றின் அமைதிகள் செவ்வே புலப்பட்டன; சிலச்சிலவற்றின் அமைதிகள் இன்னும் புலப்பட்டில. அப் புலப்பட்ட பலவும் முன்னோர் அடிச்சுவடொற்றி யறிதலையே காரணமாகவுடைய. எனது ஆராய்ச்சிக்குத் தொல்காப்பியமும் நன்னூலுட் சிலபகுதியும் கலித்தொகையின் உரைப்பகுதியும் பிரயோகவிவேகமும் இலக்கணவிளக்கச் சூறாவளியும் சிறப்பாகவும், ஏனைய்வெல்லாம் பொதுவாகவும் பயன்பட்டன.

பெயர்வினைகளுக்கு முதனிலைகளாக வருவவெல்லாம் உரிச்சொற்களேயாகுமென்பது முன்னர்த் தெளியப்பட்டது. அதன்பின்னர் உரிச்சொற்களின் மூலம் இடைச்சொற்களிலே அமைந்திருத்தல் தெற்றெனத் தெளியப்பட்டது. அவ் விடைச்சொற்களெல்லாம் சுட்டெழுத்தையும் வினாவெழுத்தையும் அடிப்படையாகக்கொண்டுளவென்பதும் அதன்பின்னர் வெள்ளிடைவரையிலக்காயிற்று.

சுட்டெழுத்தி னடியாக வினாவெழுத்தும் அவ்வினாவின்வழியாக அன்னபிறவும் தோன்றி மக்களியற்கையொடு ஒன்றித்துவருதலை யூன்றி நோக்கி நுகர்தலினும் பெரியதொருநுகர்ச்சி யாண்டுமுளதென்றல் பயனில்கூற்றாகும். இன்னும் இவ் விடையெழுத்துக்களையும், சொற்களையும் ஆதிகாலத்தே மக்கள் பொருள்களுக்குரிய பெயர்வினைகளாகப் பயின்றுவந்தனர் என்பதும் இதனானே தெளிந்துகொள்ளலாகும்.

இடையோத்திற் கூறற்பாலவா[ய] சுட்டு வினாக்களை நூன்மரபிலேயே அமைத்துப்போந்த காரணந்தான் யா[தா]வென்று பன்னாளும் ஆழ்ந்து சிந்தித்துவந்ததோர் ஆராய்ச்சியின்பயனும் நலன்பெறுதற்கு மேலே கண்ட முடிபே கருவியாகவிருந்தது.

ஆசிரியர் தொல்காப்பியனார் சுட்டுவினாக்களை நூன்மரபிலேயே அமைத்துப்போந்தமைக்கு ஆட்சியே ஒரு பெருங்காரணமாகுமென்று அந் நூலுரையாசிரியரெல்லாரும் உரைத்துப்போந்தார். அப்பெரியாரெல்

லாரும் உரைத்தபடி ஆட்சிகாரணமாக அச் சுட்டு வினுக்கண்மட்டுமேயன் றித் தோற்றமே சிறப்பே முதலாய பலவும் அமைதலின் அவர்தங்கொள் கையொடு அமைந்தொழிதற்கு எனது மனம் ஒருப்பட்டிலது. ஆத லிற் பிறிதொரு சிறந்தகாரணமும் அவற்றை யாண்டமைத்தற்கு வேண் டியதொன்றாகும் எனத் துருவுதலும் கடமையாயிற்று.

சுட்டுவினுக்களை ஆதாரமாகக்கொண்டு ஆதியிலே மக்கள் பேசிவந் தனராதலின் நூன்மரபினிறுதியிலே அதனொழிபாகப் பண்டைக் காலத்தே பேசிவந்தமை புலப்படுத்தற்கே ஆசிரியர் ஆண்டமைத்தார் என்றுணர்வதுவே சாலச் சிறப்புடையதொன்றாம்.

சுட்டின்வழியே வினவும், வினுவின்வழியே சுட்டும் தோன்றுதல் கண்கூடு. அவற்றின்வழியே வியப்பு அச்சம் ஐயம் முதலியனவும் தோன் றுத னெறியாகும். ஞானநூல் உலகினைக்குறிக்கும்போது அவனே அவளே அதுவே எனக்குறித்துச் செல்வதும், பெயர்தெரியாவிடத்துச் சுட்டுவினுப்பெயர்களை வழங்கலும் தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத் திலே சுட்டுப்பெயர்களை நனியெடுத்தாளுதலும், பிறவும் இச்சுட்டே சொன்மூலமாதலைத் தெள்ளத்தெளியப் புலப்படுத்தா நிற்கும். அன்றி யும், உரிச்சொற்களுக்கு இடைநிலைமுதலிய சேர்த்தே பெயர்வினைகளாக மாற்றுதலின், அவ்வுரிச்சொல்லை வேறுக்குதற்கு இடைச்சொல்லே காரணமாகவிருத்தலின உரிச்சொல்லினும் இடைச்சொல் முந்தியதென் பதற்கு வேறுசான்றும் வேண்டா. பெயரிடத்து இடைநிலை வருதலும் இதனை வலியுறுத்தும். பெயரிடைநிலையின் காரணமறியாது பிற்காலத் திலக்கணநூலாசிரியரெல்லாரும் இலக்கியங்கண்டதற் கிலக்கணங்கூறப் புகுதலென்னும் அவ்வொன்றனையே காட்டிப்போதலும் பிறவும் ஈண்டுச் சிந்திக்கற்பால.

இனிப் பெயரெழுத்து வினையெழுத்து உரியெழுத்து என ஆளாமை யும், அவற்றையெல்லாம் சொல்லென ஆளுதலும், சுட்டெழுத்து வினு வெழுத்து என்றாங்கு இடைச்சொற்களை எழுத்தாகவும் மன்னே கொன்னே என்றாங்குச் சொல்லாகவும் ஆளுதலும் பிறவும் கருதற்பாலன. இனிக் குறிப்புமுதலியவற்றையே மக்கண் முதற்கண் கூறியிருத்தல் வேண்டும் என்னும் இயைபும் பிறவும் இடைச்சொற்களின்தொன்மையை நனிவிளக்கிப்போந்தன. அன்றியும், இடைச்சொற்கள் மேற்கூறியவற்

ஞெடு இசைநிறை முதலிய பொருண்மையுங் குறித்தலின் இயற்கை யொடுதோன்றிய உண்மையுங் கொள்ளப்படும்.

இனி, இடைச்சொற்களைப் பலப்பலவாக வளர்த்துக்கொண்ட மக்கள் அவற்றின்பகுதிகளையெல்லாந் திரட்டிக்கொண்டனர். அவை யெல்லாம் பிற்காலத்து உரிச் சொற்கள் என வழங்கலாயின. எல்லாச் சொற்களும் பிறத்தற்கு இடமாகநின்றசொல் இடைச்சொல் எனக் கோடலு மொன்று. பெயர் வினைச்சொற்களின் பகுதிகளெல்லாம் உரிச் சொற்களாகும் என்று சொன்னேன். பெயர்ச்சொல் வினைச்சொல் என்ப வற்றிற்குப் பொருள் பிறிதாகும். பகுதியளவாய்நிற்கும் உரிச்சொற்குப் பொருள் பிறிதின்மையின், தமக்குத்தாமே உரிமைபூண்டசொல் என்பதுவே உரிச்சொல் என்பதன் உண்மைப்பொருளாகும். ஆகவே பெயர்வினைகளின் பகுதிகள்யாவும் உரிச்சொல் என்பது பெற்றும். பொருளுக்குப் பெயராகாது (தனக்குத்தானே) தொழிற்குப் பெய ராயினமையிற் றொழிற்பெயரெனவந்தமையும் ஈண்டு ஒப்பிடற்பாலது.

தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றிலே உரிச்சொல்லின் இலக்கணம் கூறிய வியல்பை ஆராய்வாரெல்லாரும் எனது கொள்கைக்கு உடம்படாதுபோகார். ஆங்குப் பெயர்க்கும் வினைக்கும் அமைத்ததன்மை கள் முழுதும் உரிச்சொற்கமைந்திருத்தலே தக்கதொருசான்றாகும்.

இனி நச்சினார்க்கினியர் "உரிச்சொன்முதனிலையாக எல்லாநிலைக ளும் பிறக்குமாறுணர்க" என்றும், சுப்பிரமணியதீக்ஷிதரும் "சொல் லெல்லாம் உரிச்சொல்லேயாம்" என்றுங் கூறினர். இலக்கணவிளக்க நூலாரு மிங்ஙனமே படியெடுத்து மொழிந்தார். தீக்ஷிதரைச் சிவஞான முனிவர் "எல்லாச்சொல்லு முரிச்சொல்லாமெனவும்.................. மயங்கக்கூறி" என்று கூறி மறுத்தார். இம்மறுப்பு தீக்ஷிதரைப்பற்றுமே யன்றி நச்சினார்க்கினியரைப் பற்றாது; என்னை? தீக்ஷிதர் எல்லாச் சொல்லுமுரிச்சொல் எனப் போந்தமையானும், நச்சினார்க்கினியர் உரிச் சொல்முதனிலையாக எல்லாநிலைகளும் பிறக்குமென்றலினாலுமென்க. நச்சினார்க்கினியர் எல்லாநிலைகளும் பிறக்குமென்றாரேனும் ஏற்புழிக் கோடலான் இடைச்சொல்லொழிந்தனவே கொள்க. எனவே இடைச் சொல்லின்வழியே உரிச்சொல்லும் அவ்வுரிச்சொல்லின்வழியே பெயர் வினைகளுந் தோன்றினவென்பது பெற்றும். எனவே சொற்கள் இடைச்

சொல்லிலிருந்துஉரிமைபெற்று அதனினின்றும்பெயர்ந்து பெயர்ச்சொல்லொடுதொழிற்படுதலால் வினைச்சொல்லுமாயினவென்பது தேற்றம்.

உரிச்சொற்கே "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்று ஆசிரியர் கூறிப்போந்தமையின் இடைச்சொல்லின்காரணம் விளங்குத லரிதென்க. பொருளுக்கும் சொல்லுக்கும் அமைந்த தொடர்பின்காரணம் இதுவென விளங்கத்தோன்றா என்னு முகத்தானே ஒருசிறிது விளங்கும் என்ப துணர்த்தினாராயிற்று.

சுட்டிற்கும் சுட்டடியாகவெழுந்த ஏனையவற்றிற்கும் அமைந்த நுண்பொருளறித லரிதென்பது அச் சூத்திரத்தாற் குறிக்கப்பட்ட மெய்ப்பொருளாகும்.

இனி ஆய்தவெழுத்தினைக்கொண்டே தமிழர் பல ஒலிகளையும் செய்துகொண்டனர் என்று அறிஞர் மாணிக்கநாயகரவர்கள்கூறியாங்கே இடைச்சொற்களைக்கொண்டே எல்லாப்பொருளையும் அறிவித்தற்குரிய சொற்களை நமது பண்டையோர் ஆக்கிவந்தனர் என்பதூஉம் ஒருண்மையாகும்.

இனி, இடைச்சொற்களுக்குரிய பொருள்களை ஆராய்வாம். செயப்படுபொருளே கருவியே கோடலே நீங்கன்முதலியவே உடைமையே இடமே எனவும், கழிவே ஆக்கமே விழைவே காலமே ஒழியிசையே அச்சமே பயமின்மையே பெருமையே எச்சமே சிறப்பே ஐயமே எதிர்மறையே முற்றே எண்ணே தெரிநிலையே பிரிநிலையே தேற்றமே சுட்டே வினாவே எனவும், வினையே குறிப்பே இசையே பண்பே பெயரே வினைமாற்றே சுட்டியதற்கினமே எண்மையே தஞ்சமே இலக்கமே எனவும், ஒப்பே இனமே எனவும் பலப்பல பொருள்பட இவ்விடைச்சொற்கள் பயிலுமெனின் அப் பெயர் வினைச் சொற்களெல்லாம் இவற்றுள் அடங்கும் என்பது சொல்லாதே அமையும்.

இன்னும் பகுபதவுறுப்புக்களில்லை பகுதியிற் சிறுபான்மையும் ஏனையவை முழுதும் இவ்விடைச்சொற்களாலாகுமேல் தமிழ்ச்சொற்களெல்லாவற்றி னிலைகளும் இவற்றிடையே தோன்றியவென்பது மிகையாகாது. அப்பகுதிகளுக்குரிய முதனிலைகள் உரிச்சொற்களாக மாறிஅம் மாறிய உரிச்சொற்களும் இடைச்சொற்களாகும் என்னின் வேறினி யாது கூறுதல்வேண்டும்?

ஆசிரியர் தொல்காப்பியனார் நூன்மரபிலேயே வினாவெழுத்தை விதந்துகூறப்புக்குழி அவ்வினாவிற்குச் சிறந்த எழுத்தாகிய எகரத்தை யொழித்துவிட்டு ஏகாரவினாவெழுத்தைத் தழுவிக் கொண்டமை குற்றமாகாதோ வென்னின், ஆகாது; என்னை? எகரம் சொல்லீற்றின்கண் வினாவாக வாராமையானும், அதுவே அகவினாவாக வந்து எல்லாச் சொன்மூலமுந் தானாகுதல்காட்டற்குக் கருவியாதலானும், அவ்விரண்டனையுங்காட்டற்கு ஏகாரமே சிறத்தலானும், உயிரெழுத்திலே ஏகாரம் வினாவிலே யடக்கில் அதற்கமைந்த ஏனைப் பொருள்களும் உளவாதல் கண்டு இடைச்சொற்களே எல்லாச்சொன்னிலைகளுக்கும் மூலமாகுமென்பது விளங்கப்பெறுதலானும் என்க.

பிற்காலத்து இலக்கணநூலாசிரியரெல்லாம் வினாப்பொருளிலே வரும் எழுத்துக்களையெல்லாம் ஒன்றுகூட்டியுரைக்கும் அம்மாத்திரையே கருதித் தந்நூலுள்ளே அவற்றையெல்லாம் அமைத்துப்போந்தார்.

ஆசிரியர் தொல்காப்பியனார் பெயரியலுள்ளே—

“ எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே” எனவும்,

“ சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே” எனவும்,

“ இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப”

எனவும் கூறிப்போந்த நுணுக்கம் ஆராயற்பாலது.

ஈண்டு ‘எல்லாச் சொல்லும்’ என்பது முதற்கட் பெயர்வினைகளையும் பின்னர் இடையுரிகளையும் குறிக்கும். கற்பில்லாப் பலரும் இயல்பாகப் பெயர் வினைகளையே அறிதல் சாலுமாதலின் அவற்றை முன்னும், அவற்றையுணர்ந்தபின்பே ஏனைய விரண்டையு மறிதல் சாலுமாதலின் அவற்றின்பின்னர் அவ்விரண்டனையும் அமைத்துப்போந்தார் ஆசிரியர் தொல்காப்பியனார் என்க. இவ்வமைப்பானும் யான் கூறிய வுண்மை தெற்றெனப்புலப்படுதல் காண்க.

இடைச்சொற்களினமைப்பறிந்தே உரிச்சொற்களின் அமைப்பறிதல்வேண்டு மென்னும் இயைபும் இக் காட்டியவற்றானே நன்குபுலப்படுமென்க. உரிச்சொற்களுக்கெல்லாம் அடிநிலை இடைச்சொல்லாதலைச் சிறிதுகூறுவல்.

இடைச்சொற்களுட் பெரும்பாலன பெயர் வினையான் அறியப்படுஞ் சிறப்புநோக்கி இடைச்சொல்லை ஈண்டு முற்கூறியதென்க. இதுகருதியன்றே ஆசிரியர் தொல்காப்பியனார் உரியியலிலே "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" என்று கூறினர் என்க. இக்காரணத் தோற்றம் பெயரியலுள்ளே கூறப்படாமையும் சிந்திக்கற்பாலது.

மொழிப்பொருட்காரணம் என்றது மொழிக்கும் பொருளுக்கும் அமைந்த தொடர்பாகிய காரணம் என்றவாறு. இப்பொருளுக்கு இச் சொல் யாதுசம்பந்தத்தான் வந்ததென்று இயைபுகாண்டலே மொழிப் பொருட்காரணமாய்தலென்ப.

'வா' என்னுழி மூடியவாயை உள்ளிழித்து அங்காத்தலாகிய முயற்சி நடைபெறும்; அப்பெறுகையானது கண்டதொருபொருளைத் தம்மகத்து வருகவென்று அழைத்தலை ஒருவாறு குறிப்பிடுதலும், 'போ' என்னுழி மூடியவிதழைப் புறத்தேதள்ளி அங்காத்த னிகழும்; அந்நிகழ்ச்சி தன்னுழையிருந்து வருமொருவனை வெளிச்செல்லுமா றேவுவதொரு குறிப்பினைப் புலப்படுத்தா நிற்கும்.

இன்னவாயகாரணமே நம்மனோர்க்கு 'விழிப்பத்தோன்றா' என்றும் அக்கூறியதனானே சிறிதுதோன்றும் என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவித்தார் என்க.

இத்தகைய காரணம் புலப்படாவிடினும் இவ்விடைச்சொற்களின் வழியே இவ்வுரிச்சொற்களும், இவ்விரண்டினின்றும் ஏனைப் பெயர் வினைகளுந் தோன்றியகாரணத்தை நம்மனோ ராராய்தல் சாலுமென்ப தறிவித்தற்கன்றே 'விழிப்பத் தோன்றா' என்று போந்தனரென்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் சொற்களை யெடுத்துக்கூறுழியெல் லாம் பெயர் வினைகளையும் ஏனை யிடை யுரிகளையும் வேறுபடுத்துக் கூறும்வகையும் இக்காட்டியவற்றானே நன்கறியப்படுதல் காண்க.

இனி யெழுத்துக்களின் பிறப்புக்கொண்டும் அவையிற்றிற்குரிய முயற்சிகளின்வேற்றுமைகொண்டும் பொருளி னமைதிகொண்டும் சொற் களை அமைத்துக்கொண்டமை ஆராய்ந்து செந்தமிழில் வெளியிடுவல். இச்சொல்லமைப்பு தொல்காப்பியத்தினைப் பின்பற்றியே ஆராயப்படும்.

குறிப்பு:—'தமிழ்ச்சொல்லமைப்பு' என்னும் பொதுமொழியிட்டெழுதிய இதனை எவ்வகைகொண்டும் பிறிதொரு பத்திரிகையிலே வெளியிடுதல் சாலாது.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

மதிப்புரை.

திருநான்மறைவிளக்கஆராய்ச்சி:—இப்புத்தகம், திருவாளர். கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் எம். ஏ., எம். எல். எழுதிய திருநான்மறைவிளக்கம் என்னும் வியாசத்திற் சைவத்தை அவைதிகமாக்க விரும்பும் புதியகோட்பாடு பற்றியெழுதிய விஷயங்களைத் தக்க பிரமாணங்களால் மறுத்து, உண்மையான பழைய வைதிகசைவக்கொள்கைகளை நிலைநாட்டவேண்டி, திரிசிரபுரம் திருவாளர். திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்களால், தொல்காப்பியமுதலிய பழந்தமிழ்நூல்களிலும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பழந்தமிழிலக்கியங்களிலும், தேவாரமுதலிய தமிழ்மறைகளிலும், மற்றும் தமிழ்ப்பெரும்புலவர்களும் சிவஞானச்செல்வர்களும் பாடிய பலப்பல பனுவல்களிலும், வடமொழிவேதாகமாதிகளிலுமுள்ள பிரமாணவாக்கியங்களைக் கொண்டு விரிவாயாராய்ந் தெழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்துள் ஆராய்ச்சிசெய்யப்பட்ட விஷயங்கள் அறுபது வகைவரை அடங்கியுள்ளன. அவை ஒவ்வொன்றும் விவாதவிஷயத்தை நன்குகாட்டி, அதற்குத் தக்க சமாதானம், அல்லது மறுப்புரை இவைகளெல்லாம் பிராமாணிகர்களால் அங்கீகரிக்கும்படி தெளிவாய் விரித்தெழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பார்வையிட்ட வித்துவப்பெரியார்கள் பலரும் தாந்தாம் எழுதிய அபிப்பிராயபத்திரங்களில் இதன் சீர்மையும் சிறப்பும் மிகப் பாராட்டப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்பவர்களுக்கு இப்புத்தகத்தின் அருமைபெருமைகள் நன்கு புலப்படும். இப்புத்தகத்தை முழுதும் படிப்பவர்களுக்கு உண்மையான சைவசமயசம்பிரதாயமுடிபுகள்பலவும் புலப்படுவதோடு சைவர்கள் தொன்றுதொட்டே வைதிகசம்பந்தமுடையவர்களாயொழுகிவந்திருக்கிறார்களென்பதும் விளங்கும்.

இப்படிப்பட்ட புத்தகமொன்று எழுதப்படாமலிருக்குமாயின் இனிப் பிற்காலச் சைவத்தமிழ்மக்கள் அறிவுதிரிவுடையராய் வேதவேதியர்வெறுப்புமேற்கொண்டு பலவேறுவகையாக மாறுபட்டு வலிமைகுன்றி அவைதிகராகி இம்மையு மறுமையு மிருமையு மிழப்பார்களென நினைந்து அத்தகைய கேடுவாராமைப்பொருட்டு இவ்வருமையான ஆராய்ச்சியை

யெழுதியுதவிய ஞானசீல வயோவிருத்தரான ஸ்ரீமான். திரு. மா. சாம்ப சிவம்பிள்ளையவர்களுக்குப் பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாக வைதிகசைவசமயிகளும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கற்றோரேயன்றி மற்றோரும் எளிதிற் படித்துணர்ந்து பயனடைய வேண்டி இனிய தமிழ்நடையி லெழுதியச்சிடப்பட்ட 400 பக்கங்களடங் கிய இப்புத்தகம் சைவர்களும் தமிழர்களும் ஒவ்வொருவரும் எளிதில் வாங்கிப் படிக்கும்படி விலை ரூபா ஒன்றிற்கு விற்கப்படுகிறது. வேண்டு வோர் திருச்சித் தெப்பக்குளம் போஸ்டு 59 ஆண்டார் தெருவில், மகா-ா-ா-ஸ்ரீ திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்களிடம் பெறலாம்.

திருக்குறள் பரிமேலழகருரை:—இப்புத்தகம், மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீமத். மு இராகவையங்காரவர் களாற் பார்வையிடப்பெற்று வித்தியாபானுப் பத்திராதிபர் ஸ்ரீமத். கந்த சாமிக்கவிராயரவர்களால் குறுகிய சிறு (பாகெட்) வடிவில் பதிக்கப்பட்டு எல்லாராலும் விரும்பிவாங்கப்பெற்று விலையாகிவிட்டமையால், இப்பதிப் பில் எல்லோர்க்கும் விருப்பமிருப்பதையறிந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வான் ஸ்ரீமத். மு. ரா. அருணசலக்கவிராயரவர்களால் மறுமுறை பதிக்கவிரும்பி மிகச்சிறிதாயிருந்த பிரிவியர் எழுத்தை அதிற் சிறிது பெரிதான 'லாங்ப்ரைமர்' எழுத்தால் படிப்பதற்கு எளிதாயிருக்கும் படி நல்லகாகிதத்தில் செவ்வையாகப் பதிப்பித்து நல்லபைண்டுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பதிப்பில் முன்பு காட்டப்படாத சில பாடபேதங்கள் காட்டப்பட்டிருப்பதுடன் 900 பக்கமளவு புத்தகம் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. கவிராயரவர்கள் வயோதிககாலத்தில் தமிழ்ப்புத்தகங்கள் எழுதியும் அச்சிட்டும் தமிழக்குழைத்துவருவது பற்றியும் அவர்கள் தமிழ்மக்களால் ஆதரிக்கத்தக்கவர்களே. முன்பதிப் பினும் புத்தகம் பெரிதாயிருப்பதையும் இக்காலத்துச் செலவுமிகுதியை யும் நோக்குங்கால் விலை அதிகமில்லையென்றுசொல்லும்படி இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கையடக்கமாயுள்ள இப்புத்தகமும் தமிழ்ப்பயிற்சியுடையார் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டுவது இன்றியமையாததாகும். இதனை ஸ்ரீமத். மு. ரா. அருணசலக் கவிராயரவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான், திருப்பரங்குன்றம் என்றவிலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

கிள்ளிவளவன்:—இப்பெயரிய புத்தகம், திருவாரூர் இலக்கண விளக்கபரம்பரை ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகரவர்களால் தொடர்ச்சியாக எழுதப்பெற்றுவரும் பழந்தமிழ்ப்பெருமக்கள்வரலாறு என்னும் ஆராய்ச்சிக்கட்டுரையின் மூன்றுவது வெளியீடாகும். இதிற் சோழ வாசன் கிள்ளிவளவனது அரசியன்முறையும், கல்வித்திறனும், கொடைச்சிறப்பும், வென்றிமேம்பாடும் முதலிய பலவிஷயங்கள், சிலப்பதிகாரம் மணிமேகலை அகநானூறு புறநானூறு முதலிய தமிழ்நூல்களின் ஆதாரவுகொண்டும், பிற சரிதவாராய்ச்சிப்புத்தகங்களின் உதவியைக்கொண்டும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. இங்ஙனமாய ஆராய்ச்சிகளைத் தேசிகரவர்கள் எழுதிவருவது அவர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சியின்கண்ணுள்ள ஊக்கத்தையும் உழைப்பையும் புலப்படுத்துகின்றது. வேண்டுவோர் சோமசுந்தரதேசிகரவர்கள், இலக்கணவிளக்க பரம்பரைத்தமிழ்ப்பண்டிதர், நன்னிலம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ஐந்திணையெழுபது:—சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றுன இந்நூலும் ஷை சோமசுந்தரதேசிகரவர்களால் உரையுடன் பரிசோதித்து அச்சிடப்பெற்றிருக்கிறது. இதுகாறும் முழுவதும் அச்சேருமலும் இடையிடையே சிறிது சிதைவுற்றுமிருந்த இதனை மேன்மேலும் அழியாமற் பாதுகாக்கக்கருதித் தேசிகரவர்கள் மேற்கொண்ட இம்முயற்சியும் பாராட்டத்தக்கதே. இப்புத்தகத்தின்விலை அணு. 4. வேண்டுவோர் ஷை தேசிகரவர்களிடம் பெறலாம்.

'காக்ஸ்டன் டைரி' (Caxton Diary 1927):—இது சென்னை ஸி. குமாரசாமிநாயுடு அன்ஸன்ஸால் தயாரித்து வெளியிடப்பெற்றது. இங்கிலீஷ் தமிழ் தெலுங்கு வருஷங்களுக்குரிய பஞ்சாங்கங்களும், மற்றும் உலகியல் அறிதற்குவேண்டிய பல அரிய விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன. இது நல்லகாகிதத்தில் அச்சிடப்பட்டு மிகவும் அழகாகவும் உறுதியாகவும் பைண்டுசெய்யப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னை ஜார்ஜ் டவுன் சின்னத்தம்பிதெரு 35-நம்பரில் ஸி குமாரசாமிநாயுடு ஸன்ஸிலும் பிற இடங்களிலும் பெறலாம்.

தென்னிந்திய சிலா சாசனங்கள் (**South Indian Inscriptions [Texts] volume V.**):—இப்புத்தகத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு கன்னடம் ஆகிய தேசங்களிற்கண்ட பலவகைப் பட்ட 1414 சாசனங்களின்பிரதிகளும், அவற்றுள் மூன்றின்படங் களும் அடங்கியுள்ளன. இவை கவர்ன்மெண்ட் எபிகிராபிஸ்ட் ஸ்ரீமாந், ராவ்பகதூர் H. கிருஷ்ணசாஸ்திரி B.A அவர்களால் தொகுக் கப்பெற்றன. இச்சாசனங்களின் விவரங்களை அறிந்துகொள்ளற்கு வேண்டிய முகவுரையும், உள்ளுறையும், மற்றும் ஆங்காங்கு வேண்டிய சிலகுறிப்புக்களும் இதன் தொகுப்பாசிரியராற் சேர்க்கப்பெற்றிருக் கின்றன. இதன் விலை ரூ. 11–8–0. வேண்டுவோர் கீழ்க்கண்ட இடத் திற் பெறலாம்.—Government of India Central Publication Branch, 8. Hastings street, Calcutta.

தொழிற்கல்வி:—இது, திருவிடைமருதூரிலிருந்து மாதமொரு முறைவெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. தொழிற்றுறையறிஞர் ஸ்ரீமத். அ. இராமஸ்வாமிஐயரவர்கள் இதன் ஆசிரியராவர். நம் நாட்டுக் கைத்தொழில்களையும் பிறதேசத்து இயந்திரத்தொழில்கள் முதலியவற்றையும் நம்நாட்டார் அறிந்து தேர்ச்சியடையுமாறு செய் வதே இதன் நோக்கமாகத்தெரிகிறது. அழுத்தமான கடிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் வருடச்சந்தா ரூபா 4. தனிப் பிரதி அணா 6. வேண்டுவோர் அ. இராமஸ்வாமிஐயரவர்கள், தொழிற் கல்வியாசிரியர், கௌதமன்கம்பெனி, திருவிடைமருதூர் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.